**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 117/மா/2021**

**நாள் : 25.4.2022**

திரு. M.C.சுதாகர்,
பெங்களூரு. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஓசூர் மாநகராட்சி.
– எதிர்மனுதாரர்

பெங்களூரு, பனஸவாடி, சாமன்னா லே-அவுட், 5வது கிராஸ், 6வது மெயின், கதவு எண்.38 என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. M.C.சுதாகர் அவர்களின் 22.11.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 117/மா/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெங்களூரு, பனஸவாடி, சாமன்னா லே-அவுட், 5வது கிராஸ், 6வது மெயின், கதவு எண்.38 என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. M.C. சுதாகர் தன்னுடைய 22.11.2021 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"I am Sudhakar from Hosur. My own land is available in Bagalur road near Tirumala Tirupathi kalyanamandapam, Govindharaj Nagar at Hosur. I decided to construct the commercial building in that place. So applied for building plan approval in DTCP office at Chennai. The concerned official persons are granted the approval and my file is forwarded to Hosur Municipal Corporation office through HNTDA. The building inspector and planning section officials are inspected and given the letter for apply the file through online portal. So I enquired in the revenue section in the Hosur Municipal Corporation office for fixing the vacant land tax for my land. I applied two times in online and submitted the documents at corporation office but my application

was rejected without reason and intimation. Now applied again for third time so sir please considered my complaint and help for my land fixing the tax."

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 3.12.2021 நாளிட்ட கடிதம் மூலம் ஆணையர், ஒசூர் மாநகராட்சி அவர்களிடம் கோரப்பட்டது.

3) ஆணையர், ஒசூர் மாநகராட்சி தனது 1.04.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

"திரு. எம்.சி. சுதாகர், பெங்களூரு என்பவரால் திருமலை திருப்பதி திருமண மண்டபம் அருகாமையில், கோவிந்தராஜ் நகரில் அமைந்துள்ள காலிமனைக்கு காலிமனைவரி விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மனுதாரர் இம்மாநகராட்சிக்கு 153/CP/2021-22/0003582 நாள்:15.07.2021, 153/CP/2021-22/0006565 நாள்:15.08.2021 மற்றும் 153/CP/2021-22/0013120 நாள்:02.11.2021 ஆன்லைனில் விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி விண்ணப்பங்கள் முறையே கள ஆய்வு செய்யப்பட்டத்தில் முதல் இரண்டு விண்ணப்பங்களில் கண்டறிய இயலாத நிலையில் நிராகரிக்கப்பட்டது. மூன்றாவதாக உள்ள விண்ணப்பம் கள ஆய்வு செய்யப்பட்டு மனுதாரரின் காலி மனைக்கு காலிமனை வரிவிதிப்பு எண்.153/012/07687ன்படி நிர்ணயம் செய்து காலிமனைவரி தொகை ரூ.122500/-ஐ காசோலை எண்.000186 நாள்:28.12.2021, எச்.டி.எப்.சி. வங்கி ஒசூர், மூலம் இம்மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டதை மாநகராட்சி பற்று சீட்டு எண். 153/01/3/21-22/0003105 நாள்:5.01.2022–ன்படி மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டு மனுதாரருக்கு இரசீதும் வழங்கப்பட்டது.

எனவே திரு. எம். சி. சுதாகர், பெங்களூரு என்பவரது புகார் மனுவில் கோரப்பட்டுள்ள காலிமனைக்கு காலிமனை விதிக்கப்பட்டு வரித்தொகை செலுத்தப்பட்டுவிட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

4) முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆணையர், ஒசூர் மாநகராட்சி ஆகியோரை 12.4.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.3.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

5) மனுதாரர் 12.4.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

- "ஒசூர் மாநகராட்சி அறிவிப்பு என்னால் 09.09.2021 அன்று பெறப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட ஆணையை அனுப்பி வைத்தபிறகு பலமுறை தொடர் நடவடிக்கை வேண்டி அது சம்மந்தமான தேவையான ஆவணங்கள் என்னென்ன தேவை என்பதை எனக்கு எழுத்து மூலம் தகவல் தரும்படி வேண்டினேன். தொடர் அலைச்சலுக்கு பிறகு 09.07.2021 எனக்கு கடிதம் கொடுக்கப்பட்டது. அதில் 16.04.2021 என்று தேதியிட்டு 09.07.2021 அன்று தான் எனக்கு வழங்கப்பட்டது.
- 15.07.2021 அன்று online-ல் விண்ணப்பம் செய்துள்ளேன். Hard Copy-யும் உதவி மையத்தில் ஒப்படைத்துவிட்டேன்.
- திரு. வேலு பில் collector என்னை அழைத்தார். அவர் என்னிடம் கடுமையாக பேசினார்.
- 15.08.2021 02.11.2021 அன்று மீண்டும் விண்ணப்பம் கொடுத்தேன். மீண்டும் Hard Copy-யும் கொடுத்தேன். மீண்டும் என்னை வேலு தொடர்பு கொண்டு நான் இது

சம்மந்தமான கோப்பை என்னிடமிருந்து அனுப்பிவிட்டேன். எனக்கு பணம் தராவிட்டாலும் பரவாயில்லை R.I. சுரேஸ் மற்றும் Commissioner அவர்களுக்கும் தேவையான பணம் கொடுத்தால் மட்டுமே உங்கள் வேலை ஆகும். உடனே சந்தித்து உங்கள் வேலையை முடித்துக்கொள்ளலாம் என்று அறிவுறுத்தினார்.

- 70 நாட்கள் கழித்து மீண்டும் என்னுடைய மனு நிராகரிக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் R.I. சுரேஸ் அவர்களை தொடர்பு கொண்டும், அவரும் வேலு சொன்னதையே உறுதிபடுத்தினார்.
- மீண்டும் 02.11.2021 அன்று மீண்டும் online-ல் மனு செய்தேன். 15 நாட்கள் காத்திருப்புக்கு பிறகு VLT fix செய்து ஆணை தராததால் 17.11.2021 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்தேன்.
- 22.11.2021 அன்று manual document full set கொரியர் மூலம் அனுப்பியுள்ளேன்.
- 18.12.2021 அன்று எனதுதொடர்பு இல்லாத எண்ணிலிருந்து VLT fix செய்ததற்கான ஆணை நகல் என்னிடம் எனது whatsapp எண்ணிற்கு வந்தது.
- மீண்டும் அந்த ஆணையை பெறுவதற்காக வேலு மற்றும் சுரேஸ் இருவரிடமும் தொடர்புகொண்டும் அவர்கள் என்னிடம் ஒப்படைக்கவில்லை. எனக்கு whatsapp வந்த ஆணையிலிருந்த வரி விதிப்பு எண்ணைக்கொண்டு காசோலை மூலமாக 28.12.2021 அன்று VLT செலுத்தினேன். எனக்கு உடனடியாக எந்தவிதமான ரசீதும் தரப்படவில்லை. அதற்கான காரணத்தை நான் வினவியபோது, உங்களது காசோலை பணம் எங்களது கணக்கிற்கு வந்து 15 நாட்களுக்கு பிறகுதான், உங்களுக்கு ரசீது தரமுடியும் என்று கூறினார்கள். 15 நாளைக்கு பிறகு அவர்களை நான் அனுகியபோது VLT வரி கட்டிய ரசீது எனக்கு தரப்பட்டது. அதில் ஆணையிலிருந்த எனது முழுப்பெயரும் இல்லாமல் இருந்தது. அதை சரிசெய்ய வேண்டி கேட்டேன். மேலும் அவர்கள் நீங்கள் இது சம்மந்தமாக கடிதம் கொடுங்கள், நாங்கள் திருத்தி தருகிறோம் என்று கூறினார்கள்.
- 20.01.2022 அன்று கடிதம் கொடுத்தோம். அதற்கு பிறகு எனது பெயர் மாற்றிய ரசீது நகல் மட்டும் என்னிடம் தந்தார்கள். Original தரவில்லை.
- என்னிடம் நான் சொத்து வாங்கியது 20.04.2018 அன்று அதிலிருந்து எனக்கு ஆணை பிறப்பித்த நாட்கள் வரை 8, 6 மாதங்களுக்குண்டான தொகை மட்டும் தான் வசூல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 13, 6 மாதங்களுக்கு என்னிடம் வசூல் செய்துள்ளார்கள். அதிகபடியான வசூல் செய்த தொகையையும் எனக்கு திரும்ப வழங்கும்படிகேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

6) ஒசூர் மாநகராட்சியில் சிறப்பு வருவாய் அலுவலராகப் பணிபுரியும் ம. சுரேஷ்குமார் 12.4.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“மனுதாரர் திரு. சுதாகர் என்பவருக்கு சொந்தமான கோவிந்தராஜ் நகரில் அமைந்துள்ள காலி மனைக்கு காலிமனை வரி விதித்திட வேண்டி இணைய வழி மூலமாக 15.7.2021, 15.8.2022 மற்றும் 2.11.2021 ஆகிய விண்ணப்பம் செய்திருந்தார். மனுதாரரின் காலி மனைக்கு வரிவிதிப்பு எண்.153/012/07687ன்படி வரி நிர்ணயம் செய்யப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கான காசோலை - 28.12.2021 அன்று மனுதாரரால் மாநகராட்சியில் வழங்கப்பட்டது. அதற்கான Bill 5.1.2022 அன்று மனுதாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அவருக்கு சொந்தமான மேற்கண்ட காலிமனையை நேரடியாக காண்பிக்குமாறு மாநகராட்சியால் கேட்டுக்கொள்ளப்பட்டது. இரண்டு முறை அவர் நேரடியாக காண்பிக்க மறுத்துவிட்டதால், வரி நிர்ணயம் செய்ய காலதாமதம்

ஏற்பட்டுவிட்டது என்பதையும் இம்முறைமன்ற மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் ஓசூர் மாநகராட்சி ஆணையரின் 1.4.2022 நாளிட்ட அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன :

8) இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் தனக்கு சொந்தமான ஓசூர் கோவிந்தராஜ் நகரில் உள்ள காலிமனைக்கு காலிமனை வரி விதித்திட வேண்டி இணைய வழியாக மூன்று முறை விண்ணப்பம் செய்துள்ளார். முறையீட்டு மனுதாரர் பலமுறை விண்ணப்பம் செய்தும் உரிய நிவாரணம் கிடைக்கப்பெறாததால் 22.11.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். இம்மனு தொடர்பாக அறிக்கையை அனுப்பிட ஓசூர் மாநகராட்சி ஆணையருக்கு 3.12.2021ல் இம்முறைமன்ற நடுவத்தால் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தனது வாக்குமூலத்தில் 18.12.2021 அன்று தனக்கு தொடர்பு இல்லாத எண்ணிலிருந்து காலிமனை வரி விதிக்கப்பட்டதற்கான ஆணை நகல் அவரது whatsapp எண்ணிற்கு வந்தது என தெரிவித்துள்ளார்.

மீண்டும் அந்த ஆணையை பெறுவதற்காக ஓசூர் மாநகராட்சி அலுவலர்களை தொடர்பு கொண்டும் அவருக்கு ஆணை வழங்கப்படவில்லை என்றும், தன்னுடைய whatsapp-க்கு வந்த ஆணையிலிருந்த வரிவிதிப்பு எண்ணைக் கொண்டு காசோலை மூலமாக 28.12.2021 அன்று காலிமனை வரி செலுத்தியுள்ளார். அதற்கான இரசீது 15 நாட்கள் கழித்தே மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது. மேலும் முழுப் பெயரும் இல்லாமல் இருந்துள்ளதால் 20.1.2022 அன்று கடிதம் கொடுத்த பிறகே பெயர் மாற்றிய இரசீதின் நகல் மட்டுமே அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரரின் வாக்குமூலத்திலிருந்து காலி மனைக்கு காலிமனை வரிவிதித்திட காலதாமதம் செய்யப்பட்டுள்ளதும், மனுதாரரை அலைக்கழித்ததும் தெரியவருகின்றது. இனிவரும் காலங்களில் இதுபோன்ற காலதாமதத்தையும், பொதுமக்களை அலைக்கழிக்கும் செயல்களில் ஈடுபடக்கூடாது என்றும் உரிய காலங்களில் பொதுமக்களின் மனுக்கள் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர், ஓசூர் மாநகராட்சி அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The act of the Hosur Municipal Corporation in handling the application of the petitioner leaves much behind to be desired. It is not appropriate to report that the first two online applications could not be traced. This explanation by the Commissioner is not acceptable and fair. It is clear that all is not well in the section that is in-charge of the subject of dealing with online applications and disposals. Once the Corporation launches the online system into operation the management of the system should be flawless, smooth and fault-free. But here it is not the case. Such messy substandard administration of the online method will dilute the creditability of the practice by the Corporation. It is also crystal clear that the Corporation officials concerned have driven the petitioner from pillar to post wantonly with questionable motives for 5 months nearly. This is censured in strong terms and it is ordered that strict disciplinary action should be launched against the field officials and section officials who bring disrepute to the fair image of the Government by such mean, unprofessional and ugly

behavior and mindset. The DMA is instructed to ensure that the Corporation obeys the Orders of the Forum in letter and spirit.

2022-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 25-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. M.C.சுதாகர்,
கதவு எண்.38, 6வது மெயின்,
5வது கிராஸ், சாமன்னா லே அவுட்,
பனஸவாடி,
பெங்களூரு – 560 043.
2. ஆணையர்,
ஒசூர் மாநகராட்சி,
ஒசூர்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணமலைபுரம்,
சென்னை – 600 028.
4. இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணமலைபுரம்,
சென்னை – 600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

25/4/22
செயலாளர்